மாணிக்கம். புத்தகம்

ஓம் தத் ஸத்.

சதாசிவப்பிரம யோகீஸ்வரர்

இயற்றிய

# சுகர் கைவல்லியம்.

இஃது

திருத்துருத்தி இந்திரபீடம்

கரபாத்திர சுவாமிகள் ஆதீனம்

சுத்தப் பதிப்பு.

தண்டறை ஸ்ரீமான்

சுப்பராய ஆச்சாரிய சுவாமிகள்

மாணாக்கரில் ஒருவரான

மதுரை, எஸ். கந்தசாமி பிள்ளையால்

தமது

ஸ்ரீ மீனாம்பிகை பிரஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

இதன் விலை] 1948. [அணா 5.

# விளம்பரம்.

| | |
|---|---|
| நாஞ்சீவவாதக் கட்டளை ஆரோபச் சித்திரப் படத்துடன் | விலை அணா 4. |
| சொரூபசாரம் மூலமும் அவதாரிகையும் | விலை அணா 4. |
| சுகர் கைவல்லியம் மூலம் | விலை அணா 5. |

சிவமயம்.

# இந்நூற்கு முகவுரை.

இந்நூற்கவிகளெழுத்தசையாதியெண்வகையான் முரணினு மிந்நூலாசிரியர்மேற் பிழைகூறாது, இதனு ளமைந்த விலக்கியார்த்த வுபசாந்தநிலையைக்கண் டமைதிபெற்றிருத்தலே சுகதுக்கத்தாக்கற்றிருத்தற் கியைந்த நெறி. இதனை யேற்பார் மதத்தரல்லராதலினவர்களை விலங்கொப்பினரெனப் புறக்கணித்துப் பொருளைப் பொருளாகக்காண முயல்பவ ரபேதவாதியராதலி னவர்களே அதிகாரியரெனக் கொள்க. இந்நூற் கபாத்திர ரயல்கற்போர், பாத்திரரறிவுகற்போரெனக் குறிக்கப் பெற்றும். விரிக்கிற்பெருகுமாதலிற் சுருக்கியுரைத்தாம்.

---

## கைவல்லியம்.

கேவலத்தின்றன்மை, கைவல்லியம். கேவலம், தனித்து நிற்கை. இது மனதுக்கன்றி யுடற்கன்று. பந்தமனத்தா லாதலினானும் இங்ஙனம் வாய்த்தவுடல் தறிபோலிருத்தலி லன்றாமையானும் பிராணபந்தனத் தாலுடற் கசைவின்மையும், ஐயந்திரிபகல்வால் மனதுக் கசைவின்மையும் வரற்பாலவாதலானு மென்க. இதனை மறுக்கின் முரணும்.

## சுகர் கைவல்லியம்.

இது தொகைநிலைத் தொடர்சொல்லாதலின் சுகர் கூறிய கைவல்லியம், சுகரைக் கலங்காதிருத்தற்கெழுந்த கைவல்லியம், சுகரால்விளைந்த கைவல்லியம், சுகருக்கு வாய்த்த கைவல்லியம், சுகரினின்றெழுந்த கைவல்லியம், சுகரது கைவல்லியம், சுகரிடத்தில்விளைந்த கைவல்லியம் எனச் சொற்பொருளென்றாற்போல, எழு பொருளான் மயங்கிய வொருதொடர்த் தொகைச் சொல்லாய் விரியும்.


---

இஃது,
சற்குருவே துணை.

பரிபூரணானந்தசுவாமியாரது பரம்பரையிலடைந்த ஆற்காடு-பொன்னம்பலசுவாமியார்-க. மேற்படி பரம்பரையிலடைந்த கிருஷ்ணகிரி-சுப்பராயசுவாமியாரது மாணாக்கரான சேலஞ்ஜில்லா தருமபுரிதாலூக்கா முனிஷீப்புகோர்ட்டு, வைக்கீல் கி-ஐயுலுநாயக்கர் மேற்படியார் மாணாக்கரான பல்லாவரம் யூரோப்பியன் டில்லேரி ரைட்டர் ஆ-வெங்கடாசலபதிநாயகர், 9-வது ரிஜிமெண்ட் கம்பினி சுபேதார் மகா-ா-ா-ஸ்ரீ, ஐயா கண்ணுபிள்ளையவர்கள் கேட்டுக்கொண்டபடி அச்சிற் பதிப்பிக்கப்பட்டது.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.



சற்குருவே துணை.

# சுகர் கைவல்லியம்.

## காப்பு.

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

நித்தியா நந்த மாகி நிட்கள சொரூப மாகிச்
சத்தியாய்ச் சிவமு மாகித் தாணுவா யுலகுக் கெல்லாஞ்
சித்தியாய் முத்தி யாகித் திகழ்பர மார்த்த மாகி
யத்தியி னுருவ மான வண்ணலை வணங்கு வோமே. (1)

எழுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

பொன்னுலகிற் பாதலத்திற் புவியதனிற் புறம்புள்வெளி
யொளியதனிற் பொலிந்து நின்ற

மன்னுயிர்கள் பேதங்க டமில்மறையா கமங்கடமில்
மகத்தான புராணந் தன்னில்
பன்னியசுற் பொருள்கடமிற் சிவயோகத் துச்சியதிற்
பகர்வரிய ஞானந் தன்னில்
துன்னியதோர் பரமார்த்த பிரமந் தன்னைத்
துதித்துபிதந் தொழுதல் செய்வாம். (2)

எண்சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

பராபரையாய்ச் சத்திபைந்தாய்ப் பூதந் தானாய்ப்
பலவுலகாய்ப் புவனவண்டப் பரப்பாய் மேலுஞ்
சராசரமா யனைத்துயிராய்ப் படைத்தெல் லாந்தான்
ஜகமென்னுஞ் சிறுவீட்டிற் சரித்து வாழப்
புராதனமாய்க் காத்துவினை யாடிப் பின்னர்
புனல்வடிவா யெழுந்தருளிக் கற்பாந் தத்தில்
நிராதரமா யனைத்துமழித் தெல்லாந் தானாய்
நிறைந்துநின்ற பராபரையை நினைந்துய் வோமே. (3)

வேறு.

பூரணங் களுக்கு முன்னே பூரண மாதியாகி
யாரணங் களுக்கு முன்னே யாரண மாகியெல்லாக்
காரணங் களுக்கு முன்னே காரண மானசோதி
நீரணங் கமைந்தவேணி நிமலனை நினைதல் செய்வாம். (4)

வேறு.

சாற்றரிய பரையாதி யிச்சாசத்தி
தயங்குகிரி யாசத்தி யோகசத்தி
போற்றரிய பராசத்தி ஞானசத்தி
புகலரிய சத்தியை வடிவாய்மேலு
மேத்தரிய பலகோடி சத்தியாகி
யிருந்ததனுக் கானந்த மயமாய்நின்று
மாற்றரிய வுலகமெலாம் வளர்க்குமன்னை
மலர்ப்பதங்க ளனுதினமும் வணங்கல்செய்வாம். (5)

வேறு.

ஆரணமுடிவின் வாழுநற் பொருளா
யனைத்துயி ரகத்திரு ளிரியக்
காரண விமல ஞானதே சிகனுங்
கதிரெனுஞ் சுடரதாய் விளங்கிப்
பூரணா நந்த மடியருக் கருளிப்
புகழுமூ லத்திடை வாழும்
வாரண மெனுமோர் தனிப்பரம் பதத்தை
மனத்தினும் சிரத்தினு மமைப்பாம். (6)

வேறு.

மடமையெனுஞ் சத்தியினால் விளைந்த தான
மலத்திமிரக் கிரிநூறி மாயா பந்தத்
தொடருபவக் கடல்விளைக்குஞ் சம்சா ரத்தின்
றொடர்பில்வரு வினைக்கொடுஞ்சூர்க் கடிந்த தூயோ

னடர்மலையத் துயர்முனிவற் குரைத்தங் குண்மை
யமரர்சிறை மீட்டயனைச் சிறையில் வைத்துச்
சடமாயை சூரன்மயில் மடக்கி யேறுஞ்
சரவணனு யகனிருதா டலைமேற் கொள்வாம் (7)

வேறு.

முந்துசஞ் சிதங்கடீர மும்மலக் கங்குல்மாற
இந்தியப் புலக்கண்மாய விதயமொட் டலர்ந்துபூப்ப
அந்தியோ டுதயமில்லா வாதித்த னகத்திற்றோன்ற
நந்தியெம் பெருமான்பாத நளினமென் சிரமேல்வைப்பாம். ()

பார்புனல் தீக்கால்வானம் பலவித புவனமண்ட
மேர்பெறவுலகமெல்லா மினிதெனத் தோன்றியெங்கும்
நேர்பெறு வுருவமாகி நின்றிடு மாயைநீங்கக்
கார்செறி வண்ணத்தண்ணல் கழலிணை கருத்துள்வைப்பாம்.

வேறு.

தொகுதி யின்றியே சொல்லும் பழமறைப்
பகுதி யாவும் பகர்ந்த சுருதியாய்த்
தகுதி யென்னச் சதுமறை தன்னிலே
மிகுதி யான வியாதனைப் போற்றுவாம். (10)

இதுவுமது

தாய்தன் கர்ப்பந் தரித்து மிகுத்தவண்
வாய்தல் பன்னிரண் டாண்டும் வரற்கில

தாய்மு குந்த னருவரம் பெற்றபின்
தாய் பிரிந்த சுகனடி தாழ்குவாம். (11)

வேறு.

திருஞானஞ்சுரந்தொழுகுந் திருமுலைப்பா லுண்டருளு
பெருஞான சம்பந்தப் பெருமானை யடிவணங்கிக் [ம்
கருஞாலத்துருவகையாய்க் கருங்கடன்மேற்கன்மிதந்து
வருநாவுக் கரசனிரு மலரடியு மிறைஞ்சுவாம். (12)

வேறு.

வெய்யகரா வுண்டசிறு மதலைவர
வழைத்தருளும் மெய்யன் றாளுஞ்
செய்யதிரு வாசகமு மருட்கோவைச்
செந்தமிழுஞ் சேர வோதுந்
துய்யதிரு வாதவூர்ச் சுத்ததிரு
தாளிணையுந் தொழுது போற்றி
வையமெலா மெய்ஞ்ஞான மயமாக்கும்
வசவணர்தாள் வணங்கு வோமே. (13)

வேறு.

பூதலந் தனிலுமிக்க பொன்னுல கதனி னுந்தான்
பாதலந் தனிலுந்தூய பழமறை யாய்ந்து தேர்ந்து
சாதலும் பிறப்பு மில்லாத் தத்துவ ஞானமுள்ள
தீதில்மா தவர்கடங்க டிருவடி சிரமேற் கொள்வாம். (14)

## அவை யடக்கம்.

### வேறு.

சுருதியொரு நான்குரைசெய் வியாதன் றந்த
சுகமுனிவன் சுவானுபவ சுகசொரூபங்
கருதியத னிலையுரைத்தபொருளி னுண்மை
கைவல்ய வுபனிடதங் கழறக் கண்டாஞ்
சரிதமல வொருநாளு மிதுவே தாந்தத்
தனிமுதலாத் தனையுணர்த்துந் தரங்க மீதி
லொருதிவலை மாத்திரமென் னறிவுட் கொண்ட
வுண்மைபதை யொருவழிகொண் டுரைக்கின்றே னால்.()

### வேறு.

ஓங்கு மறையோர் சுருதிமொழி
யோது முறைகேட் டிருந்தவண்
தேங்கு சோலைத் தனிக்கிள்ளை
செப்பு முவகை போலறிஞர்
பாங்கு பெறநின் றிடவுண்மைப்
பயனை யன்னோர் பகர்ந்திடலும்
ஆங்கம் மொழிகேட் டிருந்தபழக்
கத்தால் யானு முரைக்கின்றேன். (16)

சிறப்புப் பாயிரம் முற்றிற்று.

## நூல்.

அசையா நிலையாய்ச் சாந்தமதா
  யகன்று நிறைந்தாழ்ந் தமலமதாய்
வசையா தின்றிப் பேரறிவாய்
  வயங்கு மனத்தின் பூரணமாய்
நசையா வியல்பாய்ச் சுத்தமுமாய்
  நாடுங் குணங்க ணிரந்தரமா
யிசையா நின்ற பலவுயிர்க
  ளெல்லாந் தானென் றுளத்தெண்ணி. (1)

மேவுஞ் செககாட் சியினிடத்தில்
  விருப்பு வெறுப்பொன் றிலதாகித்
தாவும் விகற்ப சங்கற்பந்
  தான்சற் றிலதா முரணேது
மோவு நிலையுற் ெறான்றாகி
  யுரையற் றுணர்வற் றுடல்மயக்கும்
மேவுநீநா னெனு மயக்கு
  மிறந்த சொரூப மாநின்றும். (2)

பிரமஞான நிறை வுளதாய்ப்
  பேத மிலதாய்ச் சுகசிந்தை
இரவும் பகலும் மிரண்டுமிலா
  திலகு சீத வெப்பின்றி

விரவிச் சகமாங் கற்பனையில்
 மேவுஞ் செயலொன் றிலதாகிப்
பரவும் விடயச் சுகமதனாற்
 பகரும் பலனொன் றிலதென்றே. (3)

நீண்ட தருவு நிழலும் போல்
 நிறைவு குறைவொன் றிலதாகிப்
பூண்ட மரமும் வயிரமும்போற்
 புதிது பழமை யிலாவடிவாய்க்
காண்ட லுறுமெய் யுயிரும்போற்
 கறந்த பாலு நெய்யும்போ
லாண்ட பிரமத் துடன்சுகனு
 மகலா தொன்றாத் தோன்றினனால். (4)

இனிய வமுதாய்ச் சுடரொளியா
 யிளகிச் சுகமா யோவியம்போற்
புனித மான சுகனுக்குப்
 புந்தி மயக்கொன் றற்றதுவே
கனிவாச் சுகனுந் தந்தையுடன்
 கழற வேண்டுங் கருத்தினனாய்த்
தனியந் திரமால் வரையுறையுந்
 தந்தை மருங்கிற் சார்ந்தனனால். (5)

சார்ந்தங் கினிய தந்தையிரு
 தாளை வணங்கிச் சாற்றிடுவான்

சேர்ந்த மாயை யுதிப்பதெங்ஙன்
  றோன்றி யழிவ தெங்ஙனமென்
றோர்ந்திங் கெனக்குச் சுவானுபவ
  முரைசெய் யென்ன வுளமகிழ்வு
கூர்ந்தங் கறிவு பெறத்தெளிவு
  கொண்டு வியாத முனிகூறும். (6)

வந்த மாயை யுதிப்பதுவும்
  வளர்ந்தங் கழிவும் வரன்முறையே
முந்து பிரமத் தனுபவமு
  மொழிந்தா னதுவுஞ் சுகமுனிகேட்
டந்த ஞானஞ் சந்தேக
  மகலா திருப்ப வதுகண்டு
சந்த மறைதேர் வியாதமுனி
  சபிக்க முனிவு கொண்டன்றே. (7)

மாயா வசத்த னுகவென
  மறைதேர் வியாதன் சொலச்சீறி
சேயாஞ் சுகனு மச்சாபச்
  செயலாற் சென்றங் கவணின்று
தேயா மனனுய் வைகுந்தத்
  தென்பால் மருங்கோர் வடநிழற்கீழ்
றேயா வசத்தோ டினிதாகி
  நின்றான் தபசு நிலையுற்றே. (8)

நீண்ட சாபம் புரிந்திட்ட
நெடிய வியாதன் மகற்கிரங்கிக்
காண்டல் செய்வான் மிகத்தேடிக்
கருதிச் சுகாவென் றிடவொருக்கால்
வேண்ட வுலகத் துயிர்யாவு
மேனென் றிடலும் வியாதனுந்தா
னீண்டிப் புதல்வ ரித்தனைதா
னெமக்கே தென்ன வையுற்றே. (9)

அன்ன பொழுதிற் சங்காழி
யங்கை தரித்தோன் றுளிணையை
யுன்னிக் கருத்திற் றியானித்த
வுடனே வியாத முனிவனுக்கு
முன்ன தாகக் கருடன்மிசை
முகுந்தன் வரக்கண் டெதிர்நோக்கிப்
பொன்னங் கமலத் தாடொழுது
போற்றி மறைபாற் புகழ்ந்தனனால். (10)

புகழ்ந்து வியாத முனிவனுந்தன்
புதல்வன் சுகனைக் காணேனென்
றகந்தா னுருகி மாயனுட
னறைந்தா னதுகேட் டம்மாயன்
பகர்ந்தா னமது வைகுந்தப்
பரப்பிற் றென்பால் வடகிழக்கீ

ளூகந்தே பதினு யிரவருட
முயர்மா தவத்தி னுறுகின்றான். (11)

நின்ற தவத்தோன் றன்பாலி
னீசென் றெழுப்பி யழைத்துவா
வென்றங் குரைத்துப் பனிமலர்க
ளிதழ்வண் டறுகா லுழநறுந்தேன்
மன்றல் கமழும் பசுந்துளவோன்
மறைந்தே கியபின் மாமுனிவன்
சென்றங் கெழுந்து சுகமுனிவன்
செய்யுந் தவத்தின் செயல்காண்பான். (12)

சென்றான் திருமால் வைகுந்தத்
தென்பால் மருவும் வடகிழற்கீழ்க்
கன்று னென்னச் சுகமுனியைக்
கருதிப் பிறப்போ டிறப்பிரண்டும்
வென்று னிவனே யெனக்கருதி
வியப்புற் றுடனே வந்தருகில்
நின்று னழைத்தான் செவிகேளா
நிலையுங் கருத்து மசைந்திலனால். (13)

செயல்செப் முனிவன் கடசலத்தைத்
தெளிக்கச் சுகன்ற னுடனேயத்
துயில்கொண் டெழுந்தாற் போனினைவு
தோன்றிப் பொறியிற் புலன்றோன்றி

யியல்கொண் டெழுந்து சுகன்றுதை
யிருதா டொழுதங் கிறைஞ்சியபின்
மயல்க டவிர்ந்து தந்தையுடன்
மகிழ்ந்தோர் மாற்றமுரை செய்தான். (14)

பகரும் பதினு யிரங்கிரந்தம்
பத்தி மார்க்கத் துரைத்தனெனச்
சுகனும் வியாத முனிவனுடன்
சொல்ல வதுகேட் டம்மொழியின்
சகல பயனின் சாரமெலாஞ்
சரிய தாமென் றேற்றிவற்குப்
புகனு ரதனு ணன்முகனாற்
புகழ்தட் சணுமூர்த் தியினுலும். (15)

வேறு.

செப்பியவிம் மூவர்களா லனுக்கிரகந் தன்னைச்
செய்விக்கத் தெளிவாக வியாதன்றானுந்
தப்புதலில் யாழ்முனிவன் சொற்பயனேதென்னிற்
சர்வமுமே பிரமமய மென்றான்மேலும்
அப்பிரமன் சாட்சியே பிரமமயமென்று
னங்குள தட்சணுமூர்த்தி பாவாதீத
மொப்பரிய பிரமமென்று ரிப்படி யேமூவ
ருகந்துரைத்த வுண்மைதனை யுரைக்கின்றாரே. (16)

செவ்வியதா வியாதமுனி சுகனைப்பார்த்துச்
சிவானுபவ சிற்சொரூபந் தெளிந்த தோவென்
றிவ்வகைதான் வினவலுமெய்ச் சுகன்றானென்று
மெனக்கதுதான் றெரியவிலை யென்னலோடு
மவ்வகைகேட் டவனுடைய நிலைமையெல்லா
மடைவுடனே கேட்டறிந்து பின்னுஞ்சொல்வான்
எவ்விதத்துந் தந்தைகுரு வாதலாலே
யிவன்மயக்கங் கெடாதிருக்கு மெனவுங்கண்டு. (17)

தனையனைமா யாவயத்த னாகவெனமுன்னஞ்
சபித்ததற்கு மாறாகச் சற்குருவினாலே
யனையமல மாயைமுழு தகன்றொழியக்கடவ
னாகவிப்போ தெனச்சாப பலத்தைநீக்கி
யினையசுகன் முடிமீதிற் கரம்பாலித்திங்
கினிமேனீ சிற்சொருப மென்றுநாமம்
புனைவித்திங் கிச்சையிற்சஞ் சரித்துவேண்டும்
பொருளறிவா யெனச்சுகர்க்குப் போதித்தாங்கே. ()

உள்ளுறையு மலமாயை கவலைநீக்கி
யொளிதிகழுஞ் சுவானுபவ முணரவேண்டி
னெள்ளரிய மிதிலையெனும் பதியின்மேவி
யிருநிலங்கண் முழுதுபுரந் தளிக்கவல்ல
வள்ளலெனுஞ் சனகபிரான் றன்பால்மேவி
மன்னவனை யிதுகேளென் றுரைத்துப்போகத்

தெள்ளியநற் சுகமுனிவன் சனகன்வாழுந்
திருமனைக்கோ புரவாயிற் சேர்ந்தான்மன்னோ. (19)

அன்றவன்றா துவருரைக்கச் சனகன்கேட்டே
யவனிலையைச் சோதிப்பான் கருதியாங்கே
நின்றநிலை தனிற்சுகனை நாளேழ்வைக்க
நினைவுசற்றும் விகற்பமின்றி நிற்கவேறாத்
துன்றுமிடந் தனிலேழ்நாள் வைக்கச்சித்தந்
துலங்கவந்தப் புரத்தேழ்நாள் வைக்கமேலும்
அன்றிருந்த படியிருக்க வப்பாலேழ்நா
ளருநிதிக்க ணமர்த்தவது மறியானாக. (20)

மின்னிலகு சிறுமருங்குன் மகளிரின்ப
மிகச்சிறந்த வுணவளிக்க வறியானாக
மன்னவன்றந் திடுபோக மகிழ்ச்சியாவும்
மனதினிற்சற் றின்பமுறான் மதிப்பிலாம
லன்னவன்செய் யவமதிப்பை யறியானாகி
யகமமதை யற்றிருத்த லறிந்துமன்னன்
இன்னவன்ற னுளமேரு வொப்பாநின்ற
திதனையிழுத் தெவரசைப்ப தென்றேயுன்னி. (21)

உண்மையிலா விவன்கருத்தை யிருபத்தோர்நா
ளுறுதியுடன் சோதனையாற் சோதித்தேதா
னவமதிப்போ டின்பதுன்ப மெனும்பற்றின்றி
யனந்தகலி யாணசுப குணங்களாகித்

தவமகிமை சுத்தநிரு விகாரியாகிச்
சச்சிதா நந்தமயந் தானாய்நின்று
சிவமொளிருஞ் சுபாவவறி விஃதாமென்று
சிறந்தசிம்மா தனத்திலெழுந் தருளச்செய்து. (22)

ஈங்கவன்ற னிலையையெலா மறிந்தன்போடே
யிணையடிகள் பணிந்தரச னிதனைக்கேட்பான்
தாங்குலகத் தினிற்செயல்க ளாசைகோபந்
தவிர்ந்தொன்றாய்ச் சிவானுபவ சுபாவமாகி
யீங்குறுநீ யாரெனலுஞ் சொரூபமியானென்
றியம்புசுக முனிமொழியை யரசன்கேட்டுப்
பாங்குடனச் சொரூபமெவ னீயென்றேதான்
பணித்தலுமே சுகமுனிவன் பகர்வதானான். (23)

சாற்றரிய சொரூபநிலை ஜனகனேகேள்
சர்வபரி பூரணமாய்த் தானேதானாய்த்
தோற்றிநிறைந் தொன்றினிலுந் தாக்காதாகிச்
சொல்லரிய மனவாக்குக் கெட்டாதாகி
யேற்றமன வாக்கதனுக் கணியதாக
விலகியுல கத்தினுக்கா தாரமாகிப்
போற்றரிய வணுவுக்கோ ரணுவுமாகிப்
புகலரிய மகத்துக்கோர் மகத்தாய்மேலும். (24)

இயம்பரிதா யிணையதெனத் தேவரானு
மிணங்குதற்கு மெவரானு மெட்டாதாகி

நயம்பெறுமிந் திரியமனத் தொடர்புக்கெட்டா
நல்லதுக்கெல் லாநல்ல நயமாஞ்சோதி
வயம்பெறவே போக்குவர வின்றிஞான
மயமாகி யொளிர்கின்ற பொருளதாகிச்
சுயம்பறுபல் திரிசியமா யதிர்சமாகித்
துணைக்கெலாந் துணையான சொரூபமாகி. (25)

ஏகமுமா யனேகமுமா யிரண்டுமற்றிங்
கெளிதறியப் பட்டதுமாய்ப் படாதாய்நின்று
போகமுறப் பெரியோர்க்குச் சத்தேசித்தாய்ப்
பொருந்துமத னலின்ப மாகியெங்கும்
பாகமுற நித்தசுத்த புத்தமாகிப்
பகர்வரிய முத்தமுமாய்ச் சிறந்ததாகி
யாகமென லின்றியா னந்தமாகி
யதுவிதுவென் றுறுஞ்சுட்டு மற்றதாகி. (26)

அத்துவிதந் தானுகி யதுவுமின்றி
யகண்டமுமாய் ரேசகபூ ரகமுமின்றிச்
சித்தமிசை யானந்த மாகியெந்தச்
செயலுமின்றிச் சிதாகாச சொரூபமாகிச்
சுத்தவிண்ணு யுயர்ந்தவுப னிடதந்தன்னிற்
சொலும்பொருளா யப்பாலுக் கப்பாலாகி
யுத்தமமாந் துரியாதீதப் பொருளாநின்றங்
குரையிறந்த வவசரத்து முறுவதாகி. (27)

உணர்வுருவந் துரியாமி யாகியெந்த
வுருவமின்றி யதுவிதுநான் றனென்றோதப்
புணர்வதுவா யறிஞரா லிதுவாமென்னப்
புகலுவதே யதன்சொருபம் பிறிதன்றென்னக்
குணமிருந்த சுகமுனிவ னுரைப்பக்கேட்டுக்
கோதிலாச் சனகனுடல் குளிர்ந்துள்ளாறி
மணமுமலர் போனிறைந்த பரமானந்த
மாதவனை முகநோக்கி மன்னன்கேட்பான். (28)

வேறு.

நற்றவனே சத்தாவ தேதுவென்ன
நான்பிரம மென்று நண்ணி
மெத்தவிசா ரித்தறிந்து நிச்சயித்து
விட்டுவிடா ததுசத் தென்றே
உற்றநிலை யிதுவாகு மெனமுனிவ
னுரைசெய்ய வுகந்து மன்னன்
மற்றசுயஞ் சித்தாவ தெதுவென்ன
வம்முனிவன் கூற லுற்றான். (29)

மிக்கபல நூலறிவாற் றன்ஞான
சொருபனென விசாரஞ் செய்து
தக்கநிலை யிதுவென்று நிச்சயித்த
நிச்சயமுஞ் சத்தத் தோடே

ஒக்கவொரு வாசனையு மறவொழித்து
நின்றதுவே யுயிர் சித்தென்று
சிக்கெனவே முனியுரைக்க மன்னவன்கேட்
டானந்த நிலையே தென்றான். (30)

தேசிகன்சொல் வாக்கியத்தா னா லுணர்வாற்
றனதுசித்தத் தெளிவி னாற்றன்
மாசகலு மான்மாவே யானந்த
மென்றறிந்து மாயை நீங்கி
ஆசறவே யனுபவித்துச் சுகமயம
தாநின்ற வறிவும் போக்கி
நீசர்வ மயமானா னந்திரமா
நின்றதுவா னந்த மென்றான். (31)

என்றுசுக முனியுரைக்க மன்னவனு
மிகல்தொந்த மதுவே தென்றான்
நன்றெனவே சிற்சொருப செயல்மறந்து
தானானே பழமை போலச்
சென்றயலே கதியென்று பிறவிதொறுஞ்
சுழல்வதுவே தொந்த மாகும்
நின்றுணர்க வெனமுனிவன் ஜனகபிரா
னுளமகிழ நவிற்றல் செய்தான். (32)

மோக்கமென்ற தேதுரைசெய் யெனவினவ
மன்னவனும் முனிவன் சொல்வான்

தாக்குதலொன் றறநின்ற நானேமெய்ப்
பிரமமெனச் சகமிம் மூன்றும்
நீக்கமற வொருங்குணர்ந்து நிச்சயித்த
நிச்சயமுங் கழல விட்டிங்
காக்கமுத லறநின்ற தேததுவே
வீடென்ன வறைந்தா னன்றே. (33)

அஞ்ஞான மாவசிதைதிங் குரையென்ன
வருந்தவனை யரசன் கேட்ப
மெஞ்ஞான மாஞ்சொரூபந் தனைமறந்து
மடமையினல் விகாரி யாகி
எஞ்ஞான்றும் விடயசுக வாசனையி
னின்பதுன்பத் திடரின் மூழ்கிச்
சுஞ்ஞான சுபாவமதை யறியாவஞ்
ஞானமெனச் சுகனுஞ் சொன்னான். (34)

சொன்னமொழி கேட்டரச னவரண
மேதென்னச் சுகனு மோர்ந்து
தன்னுடலே தானெனவும் விடையாதி
சுகமெனவுந் தான்மிக் கெண்ணி
மன்னியதன் சொருபமதைத் தெரியாமல்
மழைநிசிபோல் மறைத்து மூடும்
அன்னதுவே யாவரண மெனலாகு
மிதுலைநகர்க் கரசே யென்றான். (35)

மெய்த்தவநீ விட்சேப மாவதெதிங்
குரையென்ன வேந்தன் கேட்பத்
தத்துவங்க டெரிந்தவன்போல் மேலாகத்
தனக்குமொரு தலைவ னுண்டென்
றித்தகைமை சுகவிருத்தி தனைத்தானென்
றிருப்பதெதோ வதுவிட் சேபங்
கொற்றவநீ யறிதியெனக் கோதிலாச்
சுகமுனிவன் கூறி னானால். (36)

மெய்த்தவனே பரோட்சமென லெதுவுரைசெய்
யெனவரசன் வினவ லோடும்
உற்றகுரு முகத்தாலுஞ் சுருதிமொழி
யாலுந்தன் னுணர்வி னாலும்
தத்துவசோ தனையாலுஞ் சொரூபத்தை
யறிவதுவே பரோட்ச மென்ன
லித்தகைமை யெனச்சனக னுளமகிழ
வியாதன்மக னியம்பல் செய்தான். (37)

அபரோட்ச மாவதுதா னுரையென்ன
வருந்தவனை யரசன் கேட்ப
விபரீத மேகமுமற் றெங்குளதாய்
வெளியொளியாய் மேல்கீ ழின்றிச்
சுபசொரூப மாத்திரமாய்ச் சுவானுபவ
ரசமாகிச் சுத்த மாகி

யுபனிடத மாய்விளங்க லபரோட்ச
மெனச்சனகற் குரைத்தா னன்றே. (38)

வேறு.

அநித்தமெது நித்தமெது பிரியாது
பிரித்துரைசெய் யென்னக் கேட்பச்
சனித்தவுட லசத்துயிர்தான் சத்தெனவே
நிகழ்தலினுற் றடுத்தற் கேதென்
றனித்தசத்தே யசத்தன்றிப் பிறிதன்று
விசாரணையாற் றெளிதல் வேண்டும்
தொனித்தசத்தே நித்தியமா மசத்தனித்த
மெனற்பாற்று துணிதி யென்றான். (39)

ஜனகபிரான் சுகமுனியைத் தனிநோக்கி
யானந்தந் தானே தென்ன
அனகமுறச் சகலவிபரீதமறத் துரியநிலை
தேர்ந்துசடா சடம தின்றி
கனவுலகாத் தோற்றமய லறவிட்டுத்
திரிசியங்க ளறிவாக் காண
நனவுசத்தா மாத்திரமா விளங்குவதா
னந்தமென நவிற்றல் செய்தான். (40)

ஞானமதற் கதிகாரி யாரெனவே
நராதிபனற் றவனைக் கேட்ப

வானமதிற் கறுப்புறல்போ ஞன்சீவ
னெனச்சொல்லும் வார்த்தையின்றி
ஈனமற விசாரித்துச் சிற்கனனந்
தானுக விசைந்து நின்றோன்
ருனவனே யதிகாரி யெனமுனிவன்
ஜனகனுக்குச் சாற்றி னுனல். (41)

மன்னவனு மாமுனியைப் பார்த்திதையக்
கிரந்தியெது வகுக்க வென்னக்
தன்னிலைமை யுணராமற் பலநூலாற்
றற்சொருபந் தன்னைத் தேடல்
மன்னுகழுத் தணியரையில் மருவுகுழ
விமையமறந்து மாழ்கித் தேடல்
அன்னதுபோ லிதயமுறுங் கிரந்தியென
வருந்தவன்மன் னவற்குச் சொன்னுன். (42)

மன்னவனுஞ் சுகமுனியைச் சம்சார
மெதுவென லு மன்னு கேளாய்
தன்னுடைய வனுபவத்தால் மறைநூலாற்
சற்குருவால் தன் சொரூப
மென்னமெலது வென்றுற்று விசாரியா
திருப்பதுசம் சார மாகும்
அன்னதனை யறிதியெனச் சுகன்சொல்ல
வரிதெனவே யரச னோர்ந்து. (43)

மலடிமைந்தன் கானனீ ரிந்திரசா
லம்போல வந்து வந்து
உலந்தோய்ந்து விருத்தியதா யிருந்துதன்னுள்
விளங்குவதே சுகம தென்றே
நலமுணருஞ் சுகமுனிவ னகிலநரா
திபனுமெது துக்க மென்ன
நிலமுழுதும் புரந்தளிப்போ யதன்விபர
மெல்லாம்யா நிகழ்த்தக் கேண்மோ. (44)

வேறு.

சுத்தமென்றும் பிரமமென்றுஞ் சொருபமென்றும்
துலங்கியசின் மயமென்றுந் துகளிலாத
நித்தமென்றும் புத்தமென்றும் நிகரிலாது
நிறைந்தசுயஞ் சோதியென்றும் நொய்யதாகி
முத்தபர மார்த்தமென்று மொழிவதுகேளாதே
முழுதுலகை நம்பியதில் மோகந்தன்னால்
சித்தமுறல் துக்கமெனச் சனகனுக்குமா முனிவன்
செவிகுளிரத் தெரிந்தவண்ணஞ் செப்பினானால். (45)

மிகவுணருஞ் சிற்சொரு நிட்டர்க்கெல்லாம்
விடையமே துரையுமென வேந்தன்கேட்ப
இகலறநித் தியசொருப மாகியென்று
மெங்குமா யிருப்பதுநா னென்றுந்தானே

புகலருசற் குருவருளால் விசாரந்தன்னல்
போதாந்த நித்தியத்தைப் பொருந்திநாளுந்
தகவுணரு மேலவர்க்கு விடயமென்னச்
சனகனுக்குச் சுகமுனிவன் சாற்றினுனல். (46)

வேறு.

சாற்றரிய வவ்விடய மேதுரைசெய்
யெனமுனியைச் சனகன் கேட்ப
ஏற்றியெங்கு மிருப்பிறந்து காலமிறந்
தறிவிறந்துண் டில்லை யென்று
மாற்றறிய சங்கற்ப வாதனைவிட்
டேசொருப மயமாய்த் தானே
தோற்றரவு மாத்திரமாய் நிற்பதுதா
னவ்விடய மென்று னீத்தோன். (47)

மாமுனியைச் சொருபநிட்டர் வகுத்தநிலை
யேதென்ன மன்னன் கேட்ப
யாமுரைப்ப ததுகேண்மோ சொருபமே
தானுயுஞ்சற்சீ டர்க்கு
நாமுரைப்போ மெனக்குரவர் நவின்றநிலை
யாதென்னில் நானே ப்ரம்ம
மாமெனநின் றகங்குளிர்ந்து சொல்வதே
வகுத்தநிலையாகு மென்றார். (48)

இத்தகைமை யுடையவர்க்குத் தேசிகனு
　　ரெனச்சுகனை யிறைவன் கேட்பச்
சித்தமுறு சங்கற்ப விகற்பந்தீர்ந்
　　தலையில்கட லென்ன ரூப
மற்றகண்ட சச்சிதா னந்தபரி
　　பூரணமாயமல மாகிச்
சுத்தமதாய் நின்றதுவே குருவாமென்
　　றரசற்குச் சுகன் சொன்னான். (49)

வேறு.

அரியசற் குருவை யடைந்திடுஞ் சீட
　　னாரென முனிவனை வினவ
உரியநா னிவ் வுடலெதிவ் வுலக
　　மேதென விசாரமா நின்று
விரியுமவ் விருத்தி யுறுமனன் விட்டை
　　மேவியே யுப்பொடு புனல்போற்
சரியதாய் வகுத்து நிற்பதே சீடன்
　　றெனனச் சனகனுக் குரைத்தான். (50)

வேறு.

இயலுறுசற் குருவிடத்தில் சீடன்கேட்ப
　　தேதுரைசெய் யெனமுனியை யிறைவன்கேட்ப
நயமுறத்தன் சொருபமதை நானுபேத
　　நாமரூபங்களினுற் குருவாற் றன்னாற்

செயலறவே கேட்டறிவுற் றகங்காரத்தைத்
தீர்த்தினிமே லிறையேனுஞ் சனித்திடாமல்
மயலறவே தன்னிலையைக் கேட்பதென்று
மாமுனிவன் மன்னனுக்கு வகுத்தல்செய்தான். ()

குருமொழியி னூற்சீடன் கண்டதேது
கூறுகென முனிவனைக்கொற் றவனுங்கேட்ப
அருமறைக ளாகமங்கள் புராணந்தன்னு
ளளந்தறியப் படாவிபுவா யறிவுக்கெட்டாப்
பெருமையதாய்ச் சர்வமுந்தான் கண்டுபின்னும்
பேதமற விருப்பதெது வதுசொரூபம்
ஒருமையதா யதைச்சீடன் கண்டதென்றே
யுயர்முனிவன் சனகமன்னற் குரைசெய்தானால்.(52)

காவலனு முனிவன்முகங் கருதிநோக்கிக்
காணாத தேதனைக் கழறுகென்ன
மேவியநீ நானதுவென் றிதுவேயென்றும்
விருத்தியினால் தானுன்மா வெனவாராய்ந்திங்
காவலுற விசாரணைசெய் யாத்தோடத்தி
னலேகாண் கின்றததுவேயஞ்ஞானப்
பாவனையா வதுகாணப் படாததென்று
பார்வேந்தற் கருந்தவனும் பகர்தல்செய்தான். (53)

அருந்தவனை முகநோக்கிச் சனகமன்ன
னறிந்ததே துரைசெயென வவனுஞ்சொல்வான்

பொருந்துசத்தங் களினாலும் வேதத்தாலும்
பொருந்துமனு பவத்தாலும் போதத்தாலுந்
திருந்துமகக் கருத்தாலு மனுட்டிப்பானுந்
தீர்க்கவறிந் திடுமிகுந்த தெளிவினாலும்
வருந்தியறிந் திடுதலிது வாகுமென்றே
மாதவத்தோ னரசனுக்கு வகுத்தல்செய்தான். (54)

அறியாத தேதுரைசெய் யென்னவேந்த
னருந்தவனை வணங்கிமகிழ்ந் தன்பிற்கேட்க
நெறியான்மா விதுவென்று மகண்டமென்று
மிரேசகமா மிதுவென்று நிசவானந்தம்
பிறியாத திதுவென்று மகம்பிரமமென்றும்
பேசரியநீபிரம மென்றுஞ் சொல்லால்
அறிந்திடுத லேயறியா தாகுமென்றிங்
கருந்தவன்மன் னவற்குரைத்தா னருமையானே. ()

இவ்விதமாஞ் சொரூபநிட்டர் தாமும்விட்ட
தேதுரைசெய் யெனமுனியை யிறைவன்கேட்பத்
திவ்வியசற் குருவிடத்தி லனுசந்தானச்
செயலாலு மனுக்கிரகத் திறத்தினாலுஞ்
செவ்வியநா னான்மாவென் றறிதிற்றன்னுள்
திரிபின்றித் தெளிந்துவிப ரீதந்தீர்ந்திங்
கெவ்வமற விருப்பதுவே விட்டதென்றிங்
கேதமறவரசனுக்கு முனிவன் சொன்னான். (56)

இச்சையிலாச் சொருபநிட்டர் விடாதகதேதென்
றிறைவினவச் சுகமுனியை யினிதுநோக்கி
யச்செயலோ நான்பிரம மென்னுநல்ல
வனுபவமோ டுரைமொழியு மாசான்வாக்கும்
நிச்சயமாய்த் தன்னுணர்வுங் கலந்தொன்றாய
நிர்மலமாஞ் சிற்சொருப நேரேயொத்த
எச்செயனுந் தானுதல் விடாததென்றே
யியம்பினு னரசனுக்கு முனிவன்றானே. (57)

போனதுதான் சொருபநிட்டற் கெதுதானென்னப்
புரவலனுஞ் சுகமுனியைப் புகழ்ந்துகேட்ப
ஆனசக சங்கற்ப விகற்பமற்று
யான்பிரம மெனத்திடமா யறிந்தாராய்ந்து
தானதனை யுண்மையிலே கரைத்தொன்றாக்கில்
தனித்துழியிற் றுயின்றவன்கைத் தனம்போனீங்கும்
ஈனமற வகன்றதெதோ வதுதான்போன
தெனச்சுகனும் ஜனகமன்னற் கியம்பல்செய்தான். (58)

இத்தகைய சொருபநிட்டர் தமக்ககலாத்திண்ண
மேதுரைசெய் யெனமுனியை யிறைவன்கேட்ப
உற்றகுரு வாக்கியத்தாற் சுருதிதன்னு
லுணர்ந்ததுமன் றிதுவென்றுங் கொள்வதன்று
சுத்தவிசா ரணையானிச் சயித்தசீடன்
தோற்றமழி விலாதிருந்த சொருபந்தானே

நித்தபரி பூரணமா நிலைதான்போகா
நிச்சயமென் றிறைக்குமுனி நிகழ்த்தல்செய்தான். (59)

பகர்வரிய சொருபநிட்டர் புசிப்பதனையோர்ந்து
பகர்தியெனச் சுகனையிறை பரிந்துகேட்பப்
புகலரிய திறையுமிலை செல்லச்செல்லப்
போந்ததுக்கஞ் சற்றுமல நிலையுமல்ல
நிகழ்கரண தனுபுவன போகத்தாலும்
நின்றுபுசி யாதவெதோ வதுதானகுஞ்
சுகசொருபப் புசிப்பயலன் றென்றேயோர்ந்து
சுகமுனிவன் சனகனுக்குச் சொல்லினனால். (60)

பதமுடைய சொருபநிட்டர் புசியாதேது
பகர்தியென முனிவனைப்பார்த் திறைவன்கேட்ப
இதமகித மிஃதெனவுந் துக்கசுகமிஃதெனவு
மிறையுணரத் தக்கவித மியம்பிமேலும்
விதமுடைய பரிபாக னகமமதை யற்றுநின்ற
மெய்யுணர்வ னென்றும் விதங்கள்ஞான
மதமுடனே நின்றதது புசியாதவெதனவறிதி
மன்னவனே யெனச்சுகனும் வகுத்தல்செய்தான். ()

தோற்றமுறுஞ் சீவருக்குச் சனனமேது
சொல்லுகவென் றெனச்சனகன் சுகனைக்கேட்ப
ஏற்றமுறச் சனித்தோமென் றிகல்சங்கற்ப
மெனும்விருத்தி மறந்துசனிப் பில்லையென்று

மாற்றமுற நிச்சயித்தா ராய்ந்துபார்த்த
மனோவிருத்தி தனிற்றோன்றுவந் துதையமாகி
ஊற்றமுற நின்றதுவே ஜனனமென்றிங்
குற்றமுனி ஜனகமன்னற் குரைசெய்தானால். 62)

நித்தபரி பூரணற்கு மரணமேது
நிகழ்த்துகெனச் சுகமுனியை நிருபன்கேட்ப
உற்றபரா பரமதுவே பிரமமென்றே
யுணர்ந்தறிந்தா ராய்ந்துவிசா ரணைகள்செய்து
சுத்தமென நிச்சயித்த சொருபந்தன்னிற்
றுவிதமெனும் விருத்தியினுந் தொடர்ந்திடாமல்
சித்தமய னீக்குவதே மரணமென்று
திகழ்சனகற் கருந்தவனுஞ் செப்பினானால். (63)

வேறு.

சனகபிரான் சுகமுனியைத் தானோக்கி
நல்லதெது சாற்று கென்ன
அனகமுற நான்சொருப மெனவறிந்தா
ராய்ந்துணர்ந்த வதனைத் தன்னுள்
சனிக்குமயல் திரிசியங்க ளொருங்கோவச்
சர்க்கரைபோற் கரைத்தொன் றாக்கித்
தினகரன்போ னிற்பதுவே நல்லதெனச்
சுகமுனிவன் செப்பினானால். (64)

பொல்லாமைதனையுரைசெய் யெனமுனியைப்
புரவலனும் புகழ்ந்து கேட்பச்
சொல்லாத சிற்சொருப நிலையறிய
விசாரித்துத் தெளிந்த பின்னர்
வெல்லாத வாசனைவந் துடன்கூட
வதிற்பொருந்தி விசாரந் தன்னில்
செல்லாம னிற்பதுவே பொல்லாங்கா
மெனமுனிவன் புகன்றிட் டானால். (65)

வேறு.

அரியபரா நிட்டருக்குப் பந்துவெதிங் கறைதியெனச்
சுகமுனியை யரசன் கேட்ப
உரியபர மாவதுதான் கல்யாண குணமயமா
நிலையதனிற் கலந்தொன் றாகிப்
பெரியசக வாசனைவந் துற்றாலுங் கலங்காமற்
பிரமநிட்டை தன்னின் மூழ்கித்
துரியபர சுகமதுவே தானாய நிலையதெனல்
பந்துவெனச் சுகன்சொன் னானால். (66)

ஆனாலுஞ் சுகமுனியே சொருபநிட்டர்க்
கபந்துவென்ப தறைதியென வரசன்கேட்பத்
தானான சுகம்வேறு தான்வேறாச்
சங்கற்ப விருத்தியினாற் றானன்றென்று
நானான வென்பூனே தானென்ன
மீக்கொண்ட விபரீத விகற்பந்தானே

கூனை வபந்துவென லிதுவேபாகும்
வேல்வேந்தே யெனச்சுகனுங் குறித்திட்டானால்()

செப்பரிய சுகமுனியே சடமாவதேதநனைத்
தெளிவியெனச் சனகனுந்தா னிரந்துகேட்ப
ஒப்பரிய விசாரணையாற் றன்னைத்தானென்
றுணராம லொழித்துவிட லுறவேமிக்கிங்
கப்புறமோர் விருத்தியினு லிதமகிதத்தாலே
யகமகமென் றணுவணுவா வளர்ந்தேபாசத்
துப்புறவே ஜனிக்குமது சடமாமென்று
சுகன்ஜனக மன்னனுக்குச் சொல்லினனே. (68)

மானமறுஞ் சுகமுனியே சொருபருக்கு
வருமசட மேதென்ன மன்னன்கேட்பத்
தானெனலு மற்றுசுகன் தானுமற்றுத்
தானலா ததுவுமற்றுச் சகத்தாசார
மானதுவுந் தானற்றிங் கறிவுமற்றே
யறிவுக்கு ளறிவற்றங் ககண்டமற்றிங்
கீனமற வுயர்வற்றுத் தாழ்வுமற்றிங்
கிருப்பதுவே யசடமென வியம்பினனே. (69)

வேறு.

என்றதுகேட் டிகல்வேந்த னெழில்முனியைப்
பார்த்திவனுக் கெதுரோ யென்ன

நன்றுணர்வாற் றன்சொருப நயந்தறியா
திருந்துபர னானே யென்று
துன்றுபரம் வேறுதான் வேறென்னு
மனுபவமே வியாதி யாகும்
என்றுமுனி யரசனுக்குத் துலங்கவிதை
யிணையதெனச் சொல்லி னானல். (70)

வேறு.

ஆரணஞ்சொல் சுகமுனியே யிந்தவியாதிக்
கவிழ்தமே தறைதியெனவரசன் கேட்பக்
காரணமாஞ் சிற்சொருப மெனுஞ்சொல்லற்றுக்
கருதியனு பவிப்பதுமற் றுணர்வுமற்றுச்
சீரணமா மின்பதுன்பச் செயலுமற்றுச்
சிந்தையுமற் றாமன்கண்ட கனுப்போனின்று
பூரணமா யிருப்பதுவே யவிழ்தமாகும்
புரவலனே யெனச்சுகனும் புகறல்செய்தான். (71)

இவ்விதமாஞ் சொருபருக்குக் காரணமாந்தேக
மேதுரைசெய் யெனமுனியை யிறைவன்கேட்ப
எவ்வமற விசாரத்தா லெதுதானுண்மை
யிணையதென வறியாமற் கலங்கிநின்று
வெவ்வியதோர் சுகவிருத்தி தன்னில்மேவி
விளங்குசெயல் காரணதே கந்தானகுஞ்

செவ்வியநற் புவியளிக்குஞ் சனகவேந்தே
தெளிதியெனச் சுகமுனிவன் செப்பினுல்.(72)

வேறு.

சுகமுனியைச் சனகபிரான் சூக்கவுட
லாவதெது சொல்லு கென்ன
அகமகமென் றெனவிருந்த வகவிருத்தி
குன்றும லறவே நொந்து
சகவிடய வாசனைபோ டனுகூத
மாயிருந்த சங்கற் பந்தான்
பகர்வரிய சூக்கவுட லிதுவென்றே
யரசனுக்குப் பகர்ந்திட் டானுல். (73)

புகலரிய சுகமுனியைப் புரவலனுந்
தூலமெது புகல்வா யென்ன
அகமகமென் றெனவிருந்த வகவிருத்தி
மிகவரிதே யற்ப மான
சகவிடய வாசனையே திடமென்னும்
வாசனையிற் சார்சங் கற்ப
மிகுதூல சரீரமிது வெனச்சுகனுஞ்
சனகமன்னற் கியம்பி னுைல் (74)

சனகபிரான் சுகமுனியைத் தான்கேட்ட
சங்கையெலாந் தவறி லாமல்

அனகமுறப் பலவிதமா யதிரூக்க
மாகவெடுத் தருளிச் செய்து
கனகவரை யெனுமுளத்தைக் காதலெனுங்
காற்றசைக்கக் கலங்கா ளுகி
அனகசுக வடிவமே தானுன
சுகநிலையை யறிந்தான் மன்னன். (75)

இன்னமுத மாரியெனச் சுகமுனிவன்
மெய்ஞ்ஞான மியம்பக் கேட்டு
மன்னனெமூந் தருந்தவனை மலர்த்தாளில்
வீழ்ந்திறைஞ்சி வணங்கி யேத்தித்
தன்னிதையத் துவகையுற மெய்புளகித்
திருந்தவனைத் தழுவிக் கொண்டே
இன்னுமெனக் கருள்செயெனச் சுகமுனியை
யெதிர்நோக்கிக் கேட்டல் செய்தான். (76)

முன்னெமக்கு மெய்ஞ்ஞான முழுவதும்வி
யாக்கியானவகை மொழிகின் ருற்போற்
பின்னெமக்கு யான்கேட்ட சங்கையெலாம்
ஞானமதாய்ப் பிணக்கி லாது
சொன்னமொழி யப்படியே யிருந்ததெனச்
சனகபிரான் சொல்லிப் பின்னும்
அன்னவனைச் சொல்மலரா னன்மலரா்
பூசைசெய்தங் கருச்சித் தேத்தி. (77)

ஒப்பரிய வறிவுகரு தனிலன்றி
யுனக்கொருவ ருரைத்த தல்ல
செப்பருசின் மாத்திரமாக் கேவலமா
யின்புருவாஞ் சிறந்த யோகத்
தப்படியே பன்னிரண்டாண் டிருந்தபினர்
மாயவன்ற னருளி னாலே
இப்புவிவந் தவதரித்திங் குலகமெனு
மாயைதனக் கின்றி யேக. (78)

நன்குதெய்வ வாண்டுபதி னாயிரந்த
னடுநிலையே பொருள தாக
இன்பநிலை யுற்றிருந்தாய் பிதாசபிக்க
மாயைதனின் மூழ்கி நின்று
தன்பரமச் செயல்மறந்திவ் வுலகாசா
ரப்பகுதி மருவத் தந்தை
பின்னுமனுக் கிரகிக்க யாழ்முனியுந்
தெரிவிக்கப் பெற்றாய் பின்னும். (79)

வேறு.

பங்கயத்தோன் சதுமுகத்தாற் சிற்சொருப
பாவனைநிச் சயமதனைப் பகரக்கேட்டாய்
சங்கையற வெனக்குரைசெய் தட்சிணாமூர்த்திகுரு
சொருபநிலை சாற்றக் கேட்டாய்

எங்கிருந்து மெவரவர்க ளுரைபரமரகசியங்கள்
கேட்டனையெத் தன்மை யாமே
யங்கயலற் றச்சொருபந் தன்வடிவமான திறற்
சுகமுனியென் றறையப் பெற்றாய். (80)

வேறு.

சிற்சொருப மாத்திரமே சரீரமாகிச்
சுகப்பிரம முனிவனெனத் தொல்பேர்பெற்றுத்
தற்சொருப மாகிநின்ற நின்போலென்னைத்
தானாக்க வேண்டுமெனுந் தகைமையாலே
சிற்சொருப ரகசியத்தை யெனக்குநன்றாய்ச்
செப்புகவென் றிரந்திடவத் திகழ்மெய்ஞ்ஞான
நற்சொருப மாகிவந்த புதுமைதானும்
நன்குலகோர் செய்ததவ நலமீதன்றே. (81)

என்றுபல துதிசெய்து சனகவேந்த
னெழுந்துசுக முனியடியை யிறைஞ்சியேத்தி
இன்றுதனி லிச்சைவெறுப் புயர்வுதாழ்வொன்
றுளத்துணரா தத்தயனீ யுவந்துநிற்றி
இன்றுவரும் வரவெனக்கிங் கியம்புகென்ன
வினைத்தசுக முனியதற்கிங் கிறைவகேணீ
நன்றுரைசெய் தாயென்றே யுவகைபொங்கி
நகைபுரிந்திங் குளமகிழ நவிற்றல்செய்தான். (82)

உற்றுவரு மாமாயை யுதிப்பதெங்ஙன
னுதித்தெழுந்து விளையாடி யொழிவதெங்ஙன்
உற்றுணர வுரையென்ன முனிவன்கேட்ப
வுத்தமநீ யறியாத வேறொன் றுண்டோ
பற்றுடைய மனமசைவால் மாயைதோன்றும்
பரிவான மாயையினாற் சகமுண்டாகும்
மற்றுமனச் சங்கற்ப விகற்பத்தாலே
மாறாத பலவுலகும் வளருமன்றே. (83)

உலைவறவே மனமடங்கி விண்போலாற
லுற்றெழுந்த மாமாயை யொழிந்துமாயுந்
தலையான மாமாயை யொழிந்தால்மோக
சங்கற்ப விகற்பமறுஞ் சகம்பொய்யாகும்
அலைவான மூடமற மகிலமென்னும்
வாசனைபோம் பிறவியறு மாசிலாத
நிலையான பரந்தானே யெங்குந்தானாய்
நிறைந்திருக்குமெனச்சனக னிகழ்த்தல்செய்தான். ()

அன்னவுரை கேட்டசுக முனிவனுள்ளத்
தக்கணத்தில் மெய்ஞ்ஞான வருக்கன்றோன்ற
முன்னமல திமிரமறப் பாசபந்த
மும்மாயை யிருட்டகன்று மோகநீங்கி
மன்னுசரற் காலவிண்போல் மாசிலாமல்
மனந்தெளிய விதையமுறு வனசம்பூப்பத்

துன்னுபரஞ் சோதியெங்குந் தானாய்த்தோன்றத்
தூய்மலர்கண் முகிழ்த்திமையாத் தோற்றமானான்.

அன்னநிலை யாயிரமாந் தெய்வவாண்டங்
ககலாமல் சனகனரி யணையின்மீதே
தன்னிலையோ டிருந்துமன மசைவுறாமற்
சகலகே வலங்களற்றுத் தறிபோலாகி
இந்நிலையா நிர்விகற்ப சமாதிதன்னி
லிருந்துதா னெடுங்கால மேகாந்தத்தின்
நன்னிலையாஞ் சுகாதனத்திற் றற்சொரூப
நண்ணியிருந் திமையாத நாட்டமானான். (86)

அரிதான பரமார்த்தப் பொருள்வேதாந்த
வகண்டபரி பூரணசச் சிதானந்தத்தின்
பெரிதான வாத்துமதத் துவமாய்நின்று
பிரியாத துரியபதப் பேதநீங்கிப்
புரிதான மாய்விளங்குஞ் சிற்சொரூப
பூரணா னந்தமுதப் போதந்தன்னைப்
பரிதான மாகவுண்டு சுகாநந்தத்திற்
பரஞ்சோதி வடிவமுந்தன் சுபாவமானான். (87)

அத்தகையா யிரமருவுந் தெய்வவாண்டங்
ககன்றதற்பின் மெய்ஞ்ஞான வருக்கனீங்கி

வித்தகமாஞ் சமாதிவிட்டு யோகநீங்கி
விழிதிறந்தான் சுகமுனிவன் வேந்தன்கண்டு
சித்தமகிழ்ந் தடியிணையி லிறைஞ்சியேத்தத்
திகழ்முனிவன் முகநோக்கிச் சிந்தைகூறப்
புத்தமுத வாரியென வினியநன்சொல்
பொழிந்திடுவான் சுகமுனிவன் புகல்கின்றனே.()

மன்னவனே நீயுரைத்த வாய்மையாலே
மாமாயையொழிந்துமன மயக்கநீங்கி
மின்னுசக சாலமும்போய்ப் பந்தபாசம்
விட்டகன்றங் காசையற்று நிராசைமேவி
அன்னமனச் சாந்தியினால் தியானயோக
மடைந்துளத்தி லிளைப்பாறி யளவிலாத
வின்னமுத தாரணையா லெல்லாம்பிரம்ம
மெனக்கண்டே னெனதுளத்தி லிணையில்வேந்தே.

வானமுதல் வாய்வனனீர் மண்பூதங்கள்
மற்றுமுள சகம்புவனம் வரைகள்மேரு
தானதிசை யருக்கன்மதி யுடுக்கள்வேலை
சகலவுயிர் தாபரங்கள் சராசரங்கள்
ஊனுயிர்க ணரராருக்க ரும்பர்தேவ
ருளதிலதிங் குட்புறம்பு மேல்கீழெல்லாம்
நானீயென் பதுவெல்லாம் பிரமமல்லா
னவிலுதற்கு வேறுளவோ நவினீவேந்தே. (90)

என்றுசுக முனிவரனுஞ் சனகவேந்து
மிருவருமுற் றொருமையதா யிதையநண்ணி
நன்றுணர்வால் மெய்ஞ்ஞானப் போதந்தன்னை
நயந்திருவ ரொத்துமொழி நயந்துபேசி
என்றுமுணர் போதனையுஞ் சிற்சொரூப
விரிஞான சாதனையும் பரிவானுன்னி
நின்றுணர்வி லிருவோரும் பேரானந்த
நிறைந்துதிரு விளையாடல் நிருத்தஞ்செய்தார். (91)

இன்னவகை யேழுதின மிருவர்தாமு
மிரவுபகல் தோற்றமின்றி யேகாந்தத்தின்
துன்னியநற் சுகானந்தத் தமுதபானஞ்
சுகித்தருந்தி பரவசராய்ச் சிற்சொரூப
மன்னியநற் பரஞ்சோதி மயத்தோடொத்து
மாசற்ற சொரூபத்தின் வடிவதாகி
உன்னரிய நிர்க்குணமே சுபாவமாக
வுகந்தொருவர்க் கொருவர்மகிழ்ந் துலாவலுற்றார்.

மன்னவனுஞ் சுகமுனியுந் தனியேகாந்த
மண்டபத்தி னமர்ந்திருந்தோர் மாற்றங்கூறப்
பொன்னகலி லேந்திவந்தார் சுகசெஞ்சாந்தும்
புழுக்கமுதுஞ் சுவைக்கறியும் புதுநெய்ப்பாலுங்

கன்னலுறு நறும்பாகு மினியதாய
கனிவகையும் பாயசங்கற் கண்டுங்தேனும்
மின்னனையார் கொணர்ந்தளிக்க வரசன்றானும்
வியாதன்மக னோடருந்தி விருப்பமாகி. (93)

அன்னசுக னடியிணையைச் சனகவேந்த
னகமகிழ்ச்சி யோடிறைஞ்சி நின்றுவேந்தன்
மன்னியநற் பொருளையெலாம் வியாதன்றானும்
வகுத்துரைத்த நான்மறையின் வாக்கினாலே
சொன்னமொழி யுபநிடத மெண்ணான்கென்று
தொல்பொருள் வேதாந்தநிலை சிற்சொரூபந்
தன்னிலைமை யறிந்திடுக வென்றுநெஞ்சந்
தனிவிருப்ப மாவியந்து சாற்றினானே. (94)

வெண்பா.

சனகன் சுகமுனிக்குச் சாற்றுநிலை கண்டிங்
கனகமதா நிற்பவர்க்கே யாகும்—மனவொருமை
யல்லாத யோகத் தமைதலஃ தொக்குமோ
எல்லா முணர்ந்தபய னென்.

சிறப்புப்பாயிரம் உள்பட ஆக பாடல்—110.
சுகர் கைவல்லியம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்

# ஸ்ரீ குமார தேவர் திருவாய்மலர்ந்தருளிய பிரமாணுபூதி விளக்கம்.

தனைத்தவிர வேயொன்றைத் தான்வேறாய்க்கண்டுவிடிற்
பினைச்செனம நீங்காது பிரமாணு பவமலவே. (க)

தன்னைவிட வேறொன்றாந் தானில்லாத் தன்னிடத்தில்
தன்னினைவி னாலே சகம்போலத் தோன்றிடுமே. (ய)

எங்குஞ் சிதம்பரமா யெங்கும் நிறைந்திருக்கத்
தங்குநினை வாலன்றே சகம்போலத் தோன்றிடுமே. (கக)

தங்கு நினைவதனைச் சாராது நீக்கிடத்தில்
எங்குஞ் சிதம்பரமா யிருளறவே கண்டனமே. (கஉ)

மந்தவிரு ளிற்கயிறு மாசுணம்போற் றோன்றுதலி
னிந்தவுல கென்னிடத்தி லிலகுமா ரோபிதமாய். (கங)

பழுதையினின் றோர்சத்தி
பாம்புபோற் றோன்றுதற்குப்
பழுதையினுண் டதைப்போலப்
பரத்தினுமுண் டோர்சத்தி. (கச)

சூனியஞ்சித் துப்பிரமஞ் சுத்தசிவம் பரமென்று
தானிகழ்தல் வேறில்லை தனக்கே பரியாயம். (கரு)

சங்கற்ப சத்தியினாற் சகம்போலத் தோன்றியிடும்
சங்கற்ப சத்தியதும் தன்னைவிட வேறில்லை. (கசா)

தன்சத்தை யேயுண்டாய்த் தானிருக்கு மெப்போதுந்
தன்சத்தை தன்னிற் சகத்திற்குத் தானிருப்பே. (கஎ)

தன்சித்தே தோன்றித் தான்விளங்கு மெப்போதுந்
தன்சித்தி னாலே சகமும் விளங்கிடுமே. (கஅ)

தன்னின்பே யின்பாய்த் தானிருக்கு மெப்போதுந்
தன்னின்பி னாலே சகமின்பாய்த் தோன்றிடுமே. (கசு)

தானைப்பார்த் திடுமிடத்திற்
சகலமுந்தா னாய்த்தோன்றுந்
தானைப்பா ராவிடத்திற்
சகலமும்வே றாய்த்தோன்றும். (உ0)

தனைத்தவிர வேறொன்று தான்காணி லவனுக்குப்
பிணைப்பயமும் போகாது பெரும்பயமும் நீங்காது. (உசு)

தன்னினைவி னாலே சகமாய் விரிந்தமை தனைத்
தன்னினைவை நீங்கித் தானா யிருந்தனமே. (உஎ)

உண்டா யொடுங்குவது முண்டான தன்னிடத்தே
யுண்டாகு மென்றே யொடுங்கி யிருந்தனமே. (உஅ)

ஐந்துதொழி லுமைந்தொழிலைத் தானடைத்து
மைந்துகருத்தாவு மாகியிருந்தனமே. (உகூ)

இவ்வடிவுநாமல்ல வென்று நியதிபண்ணி
யவ்வடிவைநோக்கிடத்தி லனைத்துநாமேயானோம். (நூ0)

இவ்வடிவுபந்தமென வெண்ணியேநீக்கிடத்தி
னெவ்வடிவுந் தானா யிருந்தேனதிசயமே. (௩௧)

இப்பந்தனைபோக வெண்ணியேநீக்கிடத்தி
லெப்பந்தமுமாகி யிருந்தேனதிசயமே. (௩௨)

இவ்வடிவந் தானாகி யெங்குந்திரிவேனுக்
கெவ்வடிவுந் தானா யிருக்கிலினியென்செய்வேன். (௩௩)

ஒருவடிவுகாக்க வுழன்றுதிரிவேற்கு
வருவடிவெல்லாமாகின் வாட்டமறக்காப்பதெங்கே. ()

சீவனைப்நீக்கிற் றிகைத்தனனோருருவுக்குத்
தேவனைப்பேர்நீக்கிற் றிகையேனென்றினைக்குறித்தும்

உலகமுயிர்பரமென் றுரைத்திடுமூவகைப்பொருளு
மிலகவேயானாக வென்னனுபூதியிற்கண்டேன். (௩௬)

எனைத்தவிரவேறொன்று மில்லையெனக்கண்டளவிற்
பினைத்தவிப்புநீங்கிப் பிரமமாயேயிருந்தேன். (௩௭)

தன்னுடையசத்தி தானந்தனினின்று
பின்னுலகமெல்லாம் பிறிவில்விளங்கிடுமே. (௩௮)

சங்கற்பசத்தி தானனந்தமாய்விரியு
மங்கப்படிநிகழு மண்டபிண்டமானதெல்லாம். (௩௯)

சங்கற்பமென்றுஞ் சகமென்றும்வேறில்லை
சங்கற்பமேசகமுஞ் சகமேசங்கற்பமதும். (௪0)

ஓரிடத்திற்கூவு முரையுமப்படியெதிரிட்
டோரிடத்திற்கூவுதலி னுலகுநினைவேயாம். (சக)

நினைவென்றசங்கற்ப நிசவடிவை நோக்கிடத்திற்
றனையன்றிவேறில்லை தங்கத்திற்பணிதியைப்போல். ()

யானுகேனென்றகற்றும் யாதும்பிறிவின்றி
யானுகிநிற்குகே னென்னவதிசயமே. (சங)

ஆங்காரஞ்சித்த மந்தமனமதியிறந்து
நீங்காதவென்னிடத்தி னிலையாயிருந்தனமே. (சச)

சங்கற்பமுண்டாகிற் சாற்றுமகக்கரண
மங்கப்போதுண்டாகி யகங்காராதிகளாம். (சரு)

ஐயந்துணிவு வபிமானஞ்சிந்தனைகள்
செய்யுமகக்கரணச் சித்தமுதனுன்கும். (சகூ)

ஓசைபரிச முருவஞ்சுவைகந்த
மாசையினிற்றுனறிய வறிவிந்தியந்தோன்றும். (சஎ)

அறிவிந்தியமதனி லறிந்துசெயக்கருமப்
பொறியைந்துந்தோன்றும் பொருந்துமிவைபதினுலாம்

சங்கற்பம்வேருகிற் றுன்பதினுலும்வேருஞ்
சங்கற்பந்தானுகிற் றுனுய்விளங்கிடுமே. (சகூ)

முற்றிற்று.

# 131-வது ஊர்.

## இரட்டைக்தாழிசை வெண்செந்துறை.

நான்முக னுக்கிட மானவூ ரெங்களூர்
நான்மறை யுந்துதி செய்யுமூ ரெங்களூர்
தேவுக்குந் தேவா யிருக்குமூ ரெங்களூர்
தேவர்க ளன்றித் திரியுமூ ரெங்களூர். (௧)

தோற்றர வாகத் துணிந்தவூ ரெங்களூர்
சோகமோ கங்க டுறந்தவூ ரெங்களூர்
ஆற்ற லுடையார்க் கடைத்தவூ ரெங்களூர்
ஆனந்த மாயே யிருக்குமூ ரெங்களூர். (௨)

காமக் குரோதங் கழிந்தவூ ரெங்களூர்
கல்விக் கடலைக் கடந்தவூ ரெங்களூர்
நாமரூ பங்க டவிர்ந்தவூ ரெங்களூர்
ஞானமே யாக நவின்றவூ ரெங்களூர். (௩)

அறிவிட் டறியாமை போக்குமூ ரெங்களூர்
அன்னிய மொன்றுமி லாதவூ ரெங்களூர்
குறியிட்டி தென்னவொண் ணாதவூ ரெங்களூர்
கோசங்க ளைந்துங் குலைந்தவூ ரெங்களூர் (௪)

புத்தி விகற்ப மறுக்குமூ ரெங்களூர்
பூரண போதமே யானவூ ரெங்களூர்
வித்தும் விளைவு மிலாதவூ ரெங்களூர்
விண்முதற் பூதம் விளைந்தவூ ரெங்களூர். (ரு)

எட்டுத் திசையு நிறைந்தவூ ரெங்களூர்
ஏகாந்த மாகி யிருக்குமூ ரெங்களூர்
தட்டற்ற யோகிக டங்குமூ ரெங்களூர்
தன்மபா வங்க டவிர்ந்தவூ ரெங்களூர். (சு)

உலகத்தை யெல்லா மொருக்குமூ ரெங்களூ
ருண்மையொன் றாகியொன் றானவூ ரெங்களூர்
சிறுகற்ற சிற்பர மானவூ ரெங்களூர்
சிந்தனை விட்டுத் தெளிந்தவூ ரெங்களூர். (எ)

உன்னப் படாவுணர் வானவூ ரெங்களூர்
உள்ளொளி யாகி யிருக்குமூ ரெங்களூர்
கண்ணுக் கணித்தா யிருக்குமூ ரெங்களூர்
கள்ளப் புலனைக் கழிந்தவூ ரெங்களூர். (அ)

கத்துஞ் சிறுகு மிலாதவூ ரெங்களூர்
காண்பானுங் காட்சியு மற்றவூ ரெங்களூர்
சுத்த வெளியிலே தோன்றுமூ ரெங்களூர்
சோம்பர் சுகமென் றுணர்ந்தவூ ரெங்களூர். (கூ)

ஊர் முற்றுப் பெற்றது.